புதுச்சேரி அரசு
வணிக வரித்துறை
***

## பத்திரிக்கை செய்திக் குறிப்பு

நவம்பர் 10, 2017 -ல் கவுஹாத்தியில் நடந்து முடிந்த 23-வது GST கவுன்சில் கூட்டத்தில் 28 சதவிகிதம் GST வரி உள்ள 178 பொருட்களுக்கு 18 சதவிகிதமாகவும், 12 சதவிகிதமாகவும் குறைக்கப்பட கவுன்சில் பரிந்துரைத்துள்ளது. இந்த மாற்றத்திற்கு பின்னர் 28 சதவிகிதம் GST வரி உள்ள பொருட்களின் எண்ணிக்கை 50 –ஆக குறைந்துள்ளது. மேலும், சில பொருட்களுக்கு GST வரி 18 சதவிகிதத்திலிருந்து 12 மற்றும் 5 சதவிகிதமாகவும், 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகவும், 5 சதவிகிதத்திலிருந்து வரி விலக்கும் அளித்து மாற்றியமைக்க கவுன்சில் பரிந்துரைத்துள்ளது. GST வரியை குறைக்க கவுன்சில் பரிந்துரைத்துள்ள சில பொருட்களின் விவரங்கள் பின்வருமாறு:

| GST வரி குறைப்பு | பொருட்கள் |
|---|---|
| 28% to 18% | i. வயர்கள், கேபிள்கள், சுவிட்ச்கள், எலெக்ட்ரிகல் ப்ளக்குகள்<br>ii. எலெக்ட்ரிகல் போர்டுகள் மற்றும் பேனல்கள்<br>iii. பர்னிச்சர் மற்றும் மெத்தைகள்<br>iv. சூட் கேஸ்கள்<br>v. டிடர்ஜென்ட்<br>vi. ஷாம்பூ மற்றும் ஹேர் டை<br>vii. ஷேவிங் கிரீம்<br>viii. வாசனை திரவியம்<br>ix. மின்விளக்கு மற்றும் பிட்டிங்க்ஸ்<br>x. மேக்கப் மற்றும் முகஅழகு பொருட்கள்<br>xi. மின்விசிறி<br>xii. சானிடரிவேர்<br>xiii. மார்பில் மற்றும் க்ரானைட்<br>xiv. செராமிக் டைல்ஸ்<br>xv. கை கடிகாரம்<br>xvi. எலெக்ட்ரிக் மற்றும் ஏலெக்ட்ரானிக் எடை இயந்திரம்<br>xvii. தீ அணைப்பான்<br>xviii. உடற்பயிற்சி உபகரணங்கள்<br>xix. சாக்லேட் மற்றும் சுயிங்கம்<br>xx. மால்ட் எக்ஸ்ட்ராக்ட் |
| 28% to 12% | கல்லால் அரைக்கும் வெட் கிரைண்டர் |

Scanned by CamScanner

| | |
|---|---|
| 18% to 12% | i. பதப்படுத்தப்பட்ட பால்<br>ii. சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை மற்றும் சர்க்கரை கட்டிகள்<br>iii. நீரிழிவு உணவு<br>iv. மருத்துவ தர ஆக்சிஜென்<br>v. பிரிண்டிங் மை<br>vi. காட்டன் மற்றும் சனல் பைகள்<br>vii. கண் கண்ணாடி பிரேம்கள்<br>viii. தையல் இயந்திரத்தின் குறிப்பிட்ட சில பாகங்கள் |
| 18% to 5% | i. கடலை மிட்டாய், அரிசி பொறி மிட்டாய்<br>ii. சட்னி பவுடர் |
| 12% to 5% | i. தேங்காய் துருவல்<br>ii. இட்லி; தோசை மாவு<br>iii. மீன்பிடி வலைகள் மற்றும் கொக்கிகள் |
| 5% to NIL | கன்டசாரி சர்க்கரை |

இது தவிர, குளிரூட்டப்பட்ட உணவகங்களுக்கும் குளிரூட்டும் வசதி இல்லாத உணவகங்களுக்கான வரி 18 சதவிகிதம் மற்றும் 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக (உள்ளீட்டு வரி வரவில்லா) குறைக்கப்பட்டுள்ளது. இவ்வுணவகங்களிருந்து வாங்கப்படும் பார்சல் உணவுக்கும் இது பொருந்தும். இருப்பினும், ஓட்டல்களில் அமைந்துள்ள உணவகங்களில் ஒரு ஓட்டல் அறையின் வாடகை ரூ.7500/- அல்லது அதற்கு மேல் இருப்பின், அந்த உணவகத்திற்கு GST வரி 18 சதவிகிதமாக தொடரும்.

GST கவுன்சில் பரிந்துரைத்துள்ள இந்த வரி குறைப்புகள் 15.11.2017 முதல் அமலுக்கு வருகின்றது. புதுச்சேரி அரசால் SGST வரி குறைக்கப்பட்டதின் அறிவிக்கைகள் வணிகவரித்துறையின் இணையதளமான https://gst.py.gov.in -ல் காணலாம். சரக்கு மற்றும் சேவைகளின் வரி குறைப்பின் முழு விவரங்களையும் இந்த அறிவிக்கைகளின் மூலம் அறிந்து கொள்ளலாம். இது குறித்த சந்தேகங்கள் மற்றும் விவரங்களுக்கு வணிகவரித்துறையின் கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1800-425-1717 -ஐ வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்.

14.11.2017

(G. ஸ்ரீநிவாஸ்)
ஆணையர் (மாநில வரி)

இடம்: புதுச்சேரி,
நாள் : 14-11-2017.

Scanned by CamScanner